# இளையோர் பாடல்கள்



முதுமுனைவர்
இரா. இளங்குமரனார்

# இளையோர் பாடல்கள்

முதுமுனைவர்

**இரா. இளங்குமரனார்**

**அறத்தமிழர் பதிப்பகம்**

4, பாப்பாத்திக்காடு - 1

நகராட்சிக் குடியிருப்பு

ஈரோடை - 638 004.

# நூற்குறிப்பு

| | |
|---|---|
| நூற்பெயர் | **இளையோர் பாடல்கள்** |
| ஆசிரியர் | இரா. இளங்குமரனார் |
| மொழி | தமிழ் |
| பொருள் | இளையர் வழிகாட்டி நூல் |
| முதற் பதிப்பு | ஏப்ரல் 2016 |
| பக்கம் | viii + 68 = 76 |
| எழுத்து | 13 புள்ளி |
| தாள் | 13.7 வெள்ளை மேப்லித்தோ |
| அளவு | 1/8 |
| படிகள் | 500 |
| விலை | உருவா : 50/- |
| உரிமை | ஆசிரியர்க்கு |
| வெளியீடு | **அறத்தமிழர் பதிப்பகம்**<br>4,பாப்பாத்திக்காடு - 1, நகராட்சிக் குடியிருப்பு,<br>ஈரோடை - 638004. பேசி : 97880 58805 |
| நூலாக்கம் | "தி பிரிண்டிங்கு அவுசு"<br>திருச்சிராப்பள்ளி - 23 |

நூல் கிடைக்குமிடம்:

- **அறத்தமிழர் பதிப்பகம்**
  4,பாப்பாத்திக்காடு - 1, நகராட்சிக் குடியிருப்பு,
  ஈரோடை - 638004.

- **திருவள்ளுவர் நிலையம்**
  7-இராமன் தெரு, திருநகர்,
  மதுரை.

❖❖❖

# பெற்ற பேறு

பன்மொழிப் புலமையர், பல்கலைச் செல்வர், நல்லபொழிவர், நூலர்.

**ஈரோடை அறவாழியார்.**

**மறைமலையடிகள், பாவாணர், எளியேன்** நூல்களால் தனித்தமிழ் ஆர்வம் உந்த சீனிவாசனாக இருந்த அவர்

**அறவாழியார்** ஆனார்

இவர் பிறந்தது கோவைப் பெருநகர்

பெற்றோர் : கண்ணபிரான் பெயர் கொண்ட கிருட்டிணசாமி அவர்கள், திருமகளார் பெயர் கொண்ட தனலக்குமியார்.

பிறந்தநாள் : 02.06.1968 உடன் பிறந்தார் குன்றைக் குடையாகப் பிடித்த கோவர்த்தனர். அறவாழியார் பெருமை மிகு பாட்டியார் வளர்ப்பில், ஈரோடையர் ஆனார்.

பாலர் பள்ளி முதல் முதுகலைப் பட்டந்தாங்கியர் ஆனார். எழுத்தர், வணிகர், காப்பீட்டுக்கழக அலுவலர், பணியர் என ஊன்றினார். எளியேன் இயற்றிய **இளையோர் பாடல்** தொகுதியை, அவரே ஆர்வத்தால் வெளியிடுகிறார் !

அவர், குருவராய், கல்வித்தந்தையாய்ப் பாராட்டும் முனைவர் திருமிகு **பி. தமிழகனார்** நூல் வெளியீட்டு அச்சிடற்பொறுப்பை மேற்கொண்டுள்ளார்!

வழக்கம் போல் **திருச்சிராப்பள்ளி அச்சுக்குழுமமே** நூலை அச்சிடுகின்றது.

வாழிய நலனே ! வாழிய நிலனே !

இன்ப அன்புடன்
**இரா. இளங்குமரன்**

வாழ்க தமிழர் வளர்க தமிழ்

## பசுமரத்து வேருக்கு நெக்குவிட்ட மாமலை

குண்டலகேசி மீட்டுருவாக்கம், பண்டைநூல்களின் மீள் பதிப்பு, தொல்காப்பிய உரை, திருக்குறள் வாழ்வியலுரை எனத் தம் பட்டறிவை நானூற்று எழுபதுக்கும் மேற்பட்ட அருநூல்களைச் செறிநூல் மலையாய் யாத்துத்தந்து, திண்ணிதின் ஓங்கி நின்று காண்போரையும் கற்போரையும் மலைப்பில் ஆழ்த்தும் மலைப்பு இல் மாமலையான இளங்குமரனார், பசுமரத்து வேரன்ன இச் சிறியனின் எண்ணத்திற் கிசைந்து வருங்காலத் தலைவர்களாம் இளையோர் பொருட்டு இளையோர் இலக்கியப் பாடல்களை எழுதவும் நேரமொதுக்கியது மலைப்பைத் தந்ததோடு அவர்தம் குமுகாயக் கடப்பாட்டுணர்வையும் தனிமனித உறவு மேம்பாட்டில் அக்கறையையும் அங்கையுள் நெல்லியெனத் தெற்றெனத் தெரிவிப்பதாம்.

“நம்ம வீட்டுப் பிள்ளை” என்று எம்மைப் பலரறியக் கூறுவது வாய்மை மொழியென்று சொல்லைச் செயலாய்க் காட்டும் சீர்மையர் ஐயா இளங்குமரனார். அன்னாரின் நூலை அறத்தமிழர் (அறவாழியார்) பதிப்பகத்தின் முதல் வெளியீடாய்ப் பதிப்பித்து வெளியிட, சொல்லாலும் செயலாலும், எல்லா வகையாலும் பேருதவி செய்து வரும் பெருந்தகையர் தமிழகனார். பசுமரத்து வேரன்ன இச் சிறியேனின் வளர்ச்சியின் பொருட்டு இவ்விருவரும் நெக்குவிட்டது யான் பெற்ற பெரும்பேறென்றே எண்ணுகிறேன்.

எமையீன்ற பெற்றோர் தனலக்குமி கிருட்டிணசாமி இணையர்க்கும் எம்பி கோவர்த்தனுக்கும், கோவை பேரூர் ஆதின ஞானாம்பிகை பதின்மப் பள்ளி முதல்வர் சாந்தி அவர்கட்கும், தாரமங்கலம் வடிவுக்கரசி செந்தில்குமார் இணையர்க்கும், தமிழ் தழைக்க உழைக்கும் ஒவ்வொருவருக்கும் இந்நூலைப் படையலாக்கி மகிழ்கிறேன்.

இந்நூலை அழகுற அச்சிட்ட திருச்சிராப்பள்ளி “தி பிரிண்டிங் அவுசு” அச்சகத்திற்கும் நன்றி.

**கி. அறவாழி**

# முன்னோட்டம்

முன்னரே, 'சிற்றருவி', 'தம்பிகேள்' என என், இளையவர் பாடல் தொகுதி வந்திருப்பினும் ஈரோடு பேரன்பர், பெரும் பற்றுமையர் அறவாழியார் விருப்பப்படி புதிது இயற்றப்பட்ட பாடல்கள் இவை. எளிமையானவை, இளையவர்க்கு அன்றி முதியவர்க்கும் பயன்படுவ உண்டு! 'ஆத்திசூடி' போல! அவ்விரு நூல்களிலும் இடம்பெறாத பாடல் வகை, விடுகவிப் பாடல்கள், விடையும் உண்டு.

வாழ்வியல் சார்ந்தவை - அறிவியல் சார்ந்தவை - உலகப் பொதுமை கருதியவை - முன்னேறத் தூண்டுபவை - கதைப் பாடல்கள் - கதைக்குறுநாடகம் - இறைமை - தாய்மை - குடும்பம் - பழந்தமிழ்ப் பெருமையர் - என்ன, இன்னபல பொருள்களில் இயல்பவை இவ்விளையோர் பாடல்கள். இவை இந்நூல் பற்றிய முன்னோட்டம்.

இன்ப அன்புடன்
**இரா. இளங்குமரன்**

# இளையோர் பாடல்கள்


| பொருள் | | பக்கம் |
|---|---|---|
| 1. | பசு | 1 |
| 2. | கிளி | 1 |
| 3. | காகம் | 2 |
| 4. | புறா | 3 |
| 5. | நிலா | 4 |
| 6. | விடுகவிகள் - 1-16 (விடைகள் இறுதியில்) | 4 |
| 7. | குவா குவா | 10 |
| 8. | நிலம் | 10 |
| 9. | நிலா | 11 |
| 10. | உவா | 11 |
| 11. | இயற்கை மருத்துவம் | 11 |
| 12. | எல்லும் அல்லும் | 12 |
| 13. | அப்பா அம்மா | 12 |
| 14. | ஆராரோ | 13 |
| 15. | வரிசை | 13 |
| 16. | அம்மா மகள் | 13 |
| 17. | ஆத்திசூடி | 14 |
| 18. | வெல்லக்கட்டி | 15 |
| 19. | முப்பால் சுவை | 16 |
| 20. | மழையே! மழையே! | 17 |
| 21. | ஓட்டம் | 18 |
| 22. | நீர்நிலைகள் | 19 |
| 23. | பூவின் பருவம் | 20 |
| 24. | மக்கட் பருவம் | 20 |
| 25. | மாணவர் | 21 |

26. பெற்றோர் 22

27. பேணும் பிள்ளை 23

28. கூட்டம் 23

29. குரல்கள் 24

30. குரல்வகை 24

31. தமிழர் விழாக்கள் 25

32. தட்டு 26

33. கண்ணி 27

34. வரிப்பாடல் 28

35. கரும்பைப் பார் 29

36. வெள்ளரிக்காய் 30

37. இயற்கை வண்ணம் 31

38. நேய உலக மூளை 32

39. தக்காரே தக்கார் 33

40. இயற்கை ஆடல் 34

41. காது கேட்கவில்லையா?.... 35

42. குணமும் குற்றமும் 36

43. பிள்ளைப்பேறு 37

44. மேனியும் மேன்மையும் 38

45. வாழ்ந்தோம் வாழ்வோம் 39

46. நலமாய் வாழ்வோம் 40

47. உலகம் வாழ்ந்தால் நாமும் வாழ்வோம் 41

48. வறுமையும் வளமையும் 42

49. கடவுள் சிரிப்பே தொண்டாகும் 43

50. வருக! வாழ்க! 43

51. வாழவேண்டும் ஒன்றாக! 44

52. உணர்வார் உணரட்டும் 45

53. சேவை ஒன்றே என்பரிசு 47

| | |
|---|---|
| 54. நொண்டி | 49 |
| 55. தாத்தா – தந்தை – பேரன் | 50 |
| 56. பிட்டின் பெருமை | 51 |
| 57. அறிவே துணை | 52 |
| 58. இறைமை நெஞ்சம் | 54 |
| 59. கூடாத கூட்டு | 55 |
| 60. எறும்பின் ஒழுக்கம் | 57 |
| 61. உதவி தந்த பாடம் | 58 |
| 62. உலகம் உருண்டை | 58 |
| 63. வள்ளல் பாரி | 59 |
| 64. வள்ளல் பேகன் | 60 |
| 65. வள்ளல் அதியமான் | 60 |
| 66. வள்ளல்கள் | 61 |
| 67. பெருமையர் | 61 |
| 68. வள்ளலார் | 62 |
| 69. பழந்தமிழர் மாதங்கள் | 63 |
| 70. கறி | 63 |
| 71. கவியின்பம் | 64 |
| 72. உருக்கும் வாசகம் | 66 |
| 73. உருவும் உளமும் | 66 |
| 74. இறை | 67 |


❖❖❖

# இளையோர் பாடல்கள்

## 1. பசு

பசுவே பசுவே வாவாவா!
பச்சைப் புல்லை நான்தருவேன்
கொசுவை அண்டா தொழித்திடுவேன்!
கொஞ்சி நன்றாய் மகிழ்ந்திடுவேன்

பாலைத் தருவாய் நாள்தோறும்;
பசியை ஒழிப்பாய் இல்லாமல்;
கால மெல்லாம் நானுன்னைக்
கருத்தாய் வளர்ப்பேன் நீ வாழ்க!

❖❖❖

## 2. கிளி

கிளியே கிளியே கிட்டே வா!
புளியா மாங்காய் நான் தருவேன் - கிளியே.

'அம்மா' - சொல்வாய் அழகாக!
'அப்பா' - சொல்வாய் இனிதாக!
'அண்ணன்' - சொல்வாய் நன்றாக!
'அக்கா' - சொல்வாய் கனிவாக! - கிளியே.

தத்தித் தத்தி வந்திடுவாய்
தத்தம் மாஉன் பேரன்றோ!
கொத்திக் கொட்டை உடைத்திடுவாய்!
கொள்ளும் அளவும் தின்றிடுவாய்! - கிளியே

❖❖❖

# 3. காகம்

காக்கா காக்கா காகாகா !
காலை எழுந்தே எழுப்பிடுவாய் !
ஆக்கும் உணவை அம்மாவே,
அயரா தென்றும் தந்திடுவார் !

கரைந்து கூவி உன்னினத்தைக்
கனிவாய் உண்ண வைத்திடுவாய் !
வரைந்து வைத்த கணக்காக
வந்து நிற்பாய் வாயிலிலே!

பக்கம் பக்கம் திரும்பித்தான்
பார்க்கத் தானோ ஒற்றைமணி?
தக்க வகையாய் உருண்டோடத்
தந்த இயற்கை அருமையதே !

அம்மா போட்ட சோறுண்ட
நன்றி ஏனோ உனக்கில்லை
அம்மா அறியா வாறேநீ,
வடையைத் திருடித் தின்றாயே !

**நன்றி கெட்ட மாந்தர்போல்**
**நன்றி கெட்டாய் நீயும்தான்!**
**நன்றி மறவா திருப்பாயேல்**
**நன்றி சொல்வேன் நானுனக்கே!**

❖❖❖

# 4. புறா

புறாவே புறாவே வாழ்த்துகிறேன்
புறவாம் முல்லைப் பறவைநீ
உறவால் பிரியா இணையுடையாய்
உன்றன் குஞ்சை அரவணைப்பாய்!

குடும்ப வாழ்வுக் கலைச்செல்வம்
கொஞ்சும் உங்கள் உறவாட்சி!
குடும்பத் தோடே நீயிருந்தும்
குடும்ப வாழ்வர் கொண்டிலரே!

புறவுக் குடும்பம் போலாகக்
கொஞ்சும் குடும்பம் அமைவானால்
உறவுப் பஞ்சம் ஒன்றில்லை!
உயர்வும் தாழ்வும் ஒன்றில்லை!

❖❖❖



## 5. நிலா

நிலவே நிலவே வரவேண்டா!
நீபோம் வழியே போபோபோ!
உலவ நானே உன்மேலே
ஒருநாள் வருவேன் கண்டிடுவாய்!

நிலாநி லாநீ வாவென்னும்
நிலைமை போய தறிந்திடுவாய்!
பலாவின் சுளைபோல் பலபேர்கள்
பாடித் திரிவார் உன்மேலே!

வளர்ந்தால் என்ன எங்களுக்கே!
தேய்ந்தால் என்ன எங்களுக்கே!
வளமாய்த் தங்க வகை செய்வோம்
வருநாள் பெரிதும் நீளாதே!

## 6. விடுகவிகள்

1. நான்கு மூலைப் பெட்டி
நந்த வனத்துப் பெட்டி
ஓடும் குதிரைக் குட்டி
வீசும் புளிய ஆக்கை
– விடுக்க வேண்டும் விடையே

**விடுகவி**

2. கட்டியால் எட்டுக் கட்டி ;
காலரை முக்கால் கட்டி ;
இட்டவர் இறந்து போனார் ;
இளம்பிள்ளை மூன்று பேர்கள் ;
கட்டியை உடைத்திடாமல் ;
கணக்காகக் கூறு வைத்துச்
சட்டெனக் கொடுத்து விட்டால்,
சண்டையும் தீர்ந்த தாகும் ;
– கட்டியைக் கூறு வைத்துக்
கணக்காகக் கூறும் நீரே.

**விடுகவி**

3. கிணற்று நீரின் மேலே
கிண்ணம் ஒன்று மிதக்குது !
குளத்து நீரின் மேலே
ஓடம் ஒன்று போகுது !
அளற்று நீரின் மேலே
உடைந்த வளையல் கிடக்குது !
உளத்தில் எண்ணிப் பார்த்தே
உரிய விடையைக் கூறுவீர் !

**விடுகவி**

4. விடிபொழுதில் உறங்கிடுவாள் ;
அடைபொழுதில் விழித்திடுவாள் ;
கொடியவளும் மடியவளும்
கொஞ்சுமுடல் வடிவினவள் ;
கடுமையதும் இல்லாதாள் ;
களங்கமெதும் இல்லாதாள் ;
அடுத்தவர்க்கு விருந்தளித்து ,
அகமகிழும் பெருமகளாள் !
அவளின்பேர் அறிந்துரைத்து
அகமகிழ்வு கொள்வீரே!

**விடுகவி**

5. நேற்றுப் போனேன் சந்தை
நேர்ந்த இரும்பு வாங்கினேன் ;
இன்று பார்த்தால் வெள்ளி
என்ன வியப்பே சொல்லுவீர் !

**விடுகவி**

6. வாயில்லை நீண்ட
வயிறில்லை காக்கைவலி
நோயில்லை நோன்பு
முறையில்லை - நாயில்லை
பல்லில்லை கொண்ட
பகையில்லை சொல்லாமல்
சொல்லிக் கடித்ததனைச்
சொல்.

**விடுகவி**

7. மூன்றெழுத்துப் பேராகும் ;
முன்னெழுத்துச் சுட்டாகும் ;
ஏன்ற முதலோ
டிறுதியவை - தோன்றுமோர்
பாதியதாம் ; பின்னிரண்டும்
பாரோங்கும் மாமலையாம் ;
ஓது கொடியதனை
ஓது !

**விடுகவி**

8. காயாய் இருந்து பழுத்தேன் ;
பழமாய்ப் பின்னர்க் காயாய்
மாற வைத்தார் என்னை!
மாறாப் பேரும் என்ன?
மாறு பேரும் என்ன?

**விடுகவி**

9. ஊசி கொண்டு தைக்க,
உரிய ஆளோ இல்லை;
பேசி வைத்த அளவாய்,
பெற்ற **சட்டை** அதனை,
உரிக்கா விட்டால் **வலிக்கும்** ;
உரித்து விட்டால் **சொலிக்கும்** !
உரித்த போதும் உள்ளே
உரிய சட்டை உண்டு !
– ஆய்ந்து கூற வேண்டும்!
அமைந்த விடையை நீரும்

**விடுகவி**

10. பச்சைப் போர்வை கண்டேன்
பனிக்கும் குளிர்க்கும் ஆமென்
றிச்சை யாலே எடுத்தேன்;
என்ன கொடுமை வேர்வேர்;
"உச்சி மட்டும் பச்சை
உரிய மண்ணின் மேலே!
நச்சி எடுத்தால் நானே
நரைத்துப் போவேன் அறிவாய்!"
– என்ற, அதனின் பேரை
எனக்குச் சொல்வீர் நீரே!

**விடுகவி**

11. பச்சைப் புடைவை கட்டியவள்;
பார்க்கக் கொழுமை விஞ்சியவள்;
உச்சி வரைக்கும் அவ்வுடையை,
ஒளிரப் போர்த்த வனப்பினவள்;
அச்சம் அறியா அணங்காகி,
அஞ்சும் நோயை அகற்றுபவள்!
இச்சை பெருக்கும் சாறாவாள்!
இயையும் பொங்கற் குள்ளிருப்பாள்!

தலைச்சரக்காம் அன்னவளைக்
கடைச்சரக்காய்க் கொண்டார்கள்!
விலைச்சரக்கும் ஆகிவிட்டாள்
விளங்கும்பேர் உரைப்பீரே!

**விடுகவி**

12. உரிக்க உரிக்க உடைபெருகும்;
உரிய உடையோ தருவரிலை;
உரிக்கும் போதும் வெட்கமிலை;
உரித்து முடித்தால் ஒன்றுமிலை!
உரிக்கும் போதில் உரிப்பவரை
உருத்திக் கண்ணீர் விடவைக்கும்;
உரிய பெயரை உணர்ந்துரைப்பீர்!
உவகை உமக்குப் பரிசாமே!

**விடுகவி**

13. வெட்டு வெட்டு வெட்டென
வெட்டிக் கொண்டே நகைக்கிறான்!
நகைத்துக் கொண்டே அழுகிறான்!
பகைத்தான் போலக் குமைகிறான்
அழுகைக் கவலை அதுவா?
அழுகைக் களிப்பே அதுவா?
எட்டிப் பார்க்க விடமாட்டான்
ஏறிட் டறிய விடமாட்டான்.
சுட்டிச் சொல்ல என்னவோ
சொல்லும் நீவிர் அறிந்ததே!

**விடுகவி**

14. ஒட்டிக் கிடந்தோம் ஒன்றாய்;
முட்டிக் கொண்டோம் பின்னே
மூன்றாய்ப் பிரிந்து கொண்டோம்
முணகிக் கொண்டும் உள்ளோம்!
பிரிந்து போகவில்லை
பேரைக் கூறும் நீரே.

**விடுகவி**

15. மூடித்திறந்த வாயுள்
பல்லைக் கண்டார் பின்னர்,
என்னைக் கண்டார் ; உடனே,
சொல்லைக் கண்டார் ; அதுபோல் !
சொல்ல வேண்டும் என்பேர் !

**விடுகவி**

16. கிளிகள் பல பறந்தன, அதுகண்ட ஒருவன் ;
"அப்பப்பா ! கிளிகள் நூறு" என்றான்
"தப்பப்பா ! உன்கணக்கு"
எங்களையும் எங்களைப் போலவும்
எங்களில் பாதியும் பாதியில் பாதியும்
உன்னையும் சேர்த்தால் நூறு – என்றன
பறந்த கிளிகள் எத்தனை ?
பாங்காய்க் கூறும் விடையே!

**விடுகவி - விடைகள்**

1. மாடு இழுக்கும் கமலை
2. கால் 5. அரை 2. முக்கால் 1.
3. முழுமதி ; அரைமதி ; பிறைமதி ;
4. அல்லி
5. வியாழன் சந்தை
6. செருப்பு
7. அவரை
8. இலாமிச்சைப்பழம் ; ஊறுகாய்
9. பாம்புச் சட்டை
10. புல்
11. மிளகுக் கொடி
12. ஈரவெண்காயம்
13. மின்னல் – இடி – மழை
14. புளியம் பிஞ்சு – ஊதைக்காய் – பழம்
15. பலா
16. 36

# 7. குவா குவா!

வினவல் 'குவா குவா' வாத்தே!
'இங்குவா இங்குவா!'
'குவா குவா' என்பதேன்

விடை வெற்றுச் சொல் இல்லை;
வேண்டாச் சொல் இல்லை!
வெற்றிச் சொல் அதுவே!
மீனே மீனே இங்குவா!
புழுவே புழுவே இங்குவா!
பற்றிக் கொள்வேன் இங்குவா!
என்ப தென்ன அறிவாய்!

❖❖❖

# 8. நிலம்

மின்விசிறிச் சிறகெத்தனை?
என்றார் ஆசிரியர்
'மூன்றே' என்றான் – முகிலன்!
'நான்கே' என்றான் – எழிலன்!
'இல்லை' என்றான் – பொழிலன்!
'எல்லாம் சரி' யென்றார் – ஆசிரியர்!
எல்லாம் சரியா என்றான் – இனியன்!
ஆமாம் என்றார் – ஆசிரியர்
நிற்கும் போதில் மூன்றே!
எமதுவாய் ஓடின் நான்கே!
விரைவாய் ஓடின் இல்லை;
விசிறி போலக் கோடி
விரைவாய் ஓடிச் செலலால்
நில்லா உலக மிதுதான்
நிலையாய் நிற்கும் என்றார்!

❖❖❖

## 9. நிலா

நேற்றைப் போல இன்று,
நிலையாய்க் காணவில்லை!
மாற்றம் மாற்றம் என்றே
மாறி மாறி நின்ற
தோற்றம் கண்ட முன்னோர்,
'நில்லா' தென்றே உரைத்தார்
போற்றும் நிலாவும் நிலவும்
ஆய ததுவே பின்னர்!

## 10. உவா

பிறந்த நிலையில் பிறையே;
வளரும் நிலையில் வளர்பிறை;
நிறைந்த நிலையில் நிறைமதி;
தேயும் நிலையில் தேய்பிறை;

முழுதும் நிறைந்தால் வெள்ளுவா!
முழுதும் தேய்ந்தால் காருவா!
உவவு தோறும் பள்ளி,
விடுமு றைநா ளாம்முன்னே!

❖❖❖

## 11. இயற்கை மருத்துவம்

தெப்பம் ஓடும் குளமதுவே,
தெப்பக் குளமாம் அறிவீரே!
தொப்பை மிக்கார் படகோட்டின்,
தொப்பை குறையக் காண்பாரே!
தொப்பை இல்லார் அமர்ந்திருக்க,
தொப்பை உள்ளார் இயக்குவது
செப்பம் ஆமோ? என்பீரேல்
'தொப்பை பெருக்கி' நீரேயாம்!
– துயரம் பெருக்கி நீரேயாம்!

❖❖❖

## 12. எல்லும் அல்லும்

"வெள்ளி முளைத்த" தென்றான்!
"அள்ளி வருக" என்றேன் ;
"அள்ள முடியாக் கொள்ளை,
அள்ள முடியா" தென்றான்!

"கொள்ளைக் காரன் ஒருவன்,
கொஞ்ச நேரம் போனால்
கொள்ளை கொள்ள வருவான்,
கொள்ளை போகும் எல்லாம்!"

"எல்லாம் கொள்ளை கொள்ள
வல்லான் எவனோ?" என்றான் ;
**"எல்லாம் அவனே"** என்பார்
**"அல்லான் எனலே அல்லாம் !"**

❖❖❖

## 13. அப்பா அம்மா

பிள்ளைப் பருவம் முதலே,
அப்பா என்றார் ஆணை ;
அம்மா என்றார் பெண்ணை ;
வளர்ந்த பின்னர் அவர்கள்
அப்பா ஆக வேண்டும்
அம்மா ஆக வேண்டும்
மரபு பெருக வேண்டும்
மாண்பு பெருக வேண்டும்
தப்பா இந்த முறைமை ?
தகவாம் பெருமை அன்றோ ;

❖❖❖

## 14. ஆராரோ

பிறந்த போதில் ஆராரோ!
இறந்த போதில் ஒப்பாரி!
சிறந்து விளங்கக் கற்பிக்கும்
சிறப்புப் பாடம் இதுவேயாம்!

ஊடே இருக்கும் சிறப்பே
உயர்வாய்க் கொள்ளும் பேற்றைத்
தேடிக் கொள்வீர் என்றார்
தெளிந்த நல்லோர் அவரே!

❖❖❖

## 15. வரிசை

வானில் வரிசை கொக்கு;
நீரில் வரிசை வாத்து;
நிலத்தில் வரிசை எறும்பு;
நலமாய்க் காட்டும் வரிசை,
**நானும் கற்றேன் நன்றாய்!**
**நாளும் நிற்பேன் நன்றாய்!**

❖❖❖

## 16. அம்மா - மகள்

**அம்மா தென்றல்! மகள் பனிமலர்!**
**தென்றலில் கமழ்ந்த பனிமலர்**

| **அம்மா** | **மகள்** |
|---|---|
| அறஞ்செய | விரும்பு |
| ஆறுவது | சினம் |
| இயல்வது | கரவேல் |
| ஈவது | விலக்கேல் |

உடையது விளம்பேல்
ஊக்கமது கைவிடேல்
எண்ணெழுத் திகழேல்
ஏற்ப திகழ்ச்சி

ஐயம் இட்டுண்
ஒப்புரவு ஒழுகு
ஓதுவது ஒழியேல்
ஔவியம் பேசேல்
அஃகம் சுருக்கேல்

செவியில் விழுந்த செய்திப் பதிவு இது
இதனை வளர்ப்பது பள்ளியா?
ஒழிப்பது பள்ளியா?
உணர்ந்து சொல்லும் நீரே!

❖❖❖

## 17. ஆத்திசூடி

அன்புத் தம்பி அன்புத் தம்பி
என்ன விரும்பிப் படிக்கிறாய்?
அருமை அக்கா அருமை அக்கா
ஆத்தி சூடி படிக்கிறேன்!
நேற்றும் படித்தாய் ஆத்தி சூடி
இன்றும் அதனைப் படிப்பதேன்?
நேற்றுச் சூடு முல்லைச் சரத்தை,
இன்றும் சூடிக் கொள்வதேன்?
முல்லைச் சரத்தின் நறும ணத்தை
விரும்பி நானும் சூடினேன்!
நேற்றுச் சூடு பூவை இன்று
சூட வில்லை ஏன்என,

நேற்றைப் பூதான் இன்று வாடி,
    நைந்து போகும் அல்லவோ!
**ஆத்தி சூடி என்றும் வாடிப்**
    **போகாச் சூடி அல்லவோ!**
ஆத்தி சூடி சூடிக் கொண்டால்
    கூந்தல் மணமும் கொள்ளுமா?
ஆத்தி சூடி சூடிக் கொண்டால்
    **வாழ்வே மணக்கும் உண்மையாய்!**
"ஆத்தி சூடி சூடிக் கொள்வாய்
    அருமை அக்கா; என்றனன்
வாடும் பூவும் சூடி, வாடாப்
    பூவும் சூடி மகிழ்கிறேன்!
நன்றி அக்கா நன்றி அக்கா
    நல்ல முடிவு செய்ததால்!
இன்று கொண்ட முடிவை எவர்க்கும்
    சொல்வாய் இனிய அக்கையே!"

❖❖❖

## 18. வெல்லக் கட்டி

குட்டிப் பாப்பா ஓடிவா!
    குறட்பா இனிக்கப் பாடிவா!
தட்டித் தட்டி ஆடிவா!
    தாவித் தாவிக் கூடிவா!

அருமைத் தாத்தா வள்ளுவர்,
    அறத்தைச் சொன்ன அண்ணலார்!
பெரிய வாழ்வு கொள்ளவே
    பேணிப் படிப்பாய் நாளுமே!

சின்ன சின்ன பாடலால்,
    சிறந்த பெரிய கருத்துகள்,
சொன்ன பெரியர் வள்ளுவர்,
    சொல்லைக் கேட்டால் வெல்லுவாய்!

எந்தத் துணையும் ஒப்பிலா
　　இனிய துணையாம் வள்ளுவம்;
அந்தத் துணையைச் சிக்கென
　　அமைத்துக் கொண்டால் வெற்றியே!

வெல்லக் கட்டி நீயேதான்
　　வெடிப்பாய்ப் பேசும் குட்டி நீ!
**வெல்லக் கட்டித் திருக்குறளால்**
　　**வெற்றி கொள்வாய் என்றுமே !**

❖❖❖

## 19. முப்பால் சுவை

அம்மா தந்தார் ஆவின்பால் ;
　　அருமை யான சுவையே தான் !
அப்பா தந்தார் ஆட்டுப்பால் ;
　　அருமை யான சுவையே தான் !

அண்ணன் தந்தார் கரும்புப்பால் ;
　　அருமை யான சுவையேதான் !
அக்கை தந்தார் தேங்காய்ப்பால்
　　அருமை யான சுவையேதான் !

ஆனால் எங்கள் ஆசிரியர்,
　　அள்ளித் தந்த முப்பாலோ
அந்தப் பால்கள் அனைத்திலுமே
　　அருமை யாகச் சுவைத்ததுவே!

குடிக்கச் சுவைக்கும் அப்பால்கள்,
　　படிக்கச் சுவைக்கும் முப்பாலை
ஒப்பச் சுவைக்கக் கூடுவதோ ?
　　உணர்ந்து சுவைக்கக் கூடுவதோ?

❖❖❖

## 20. மழையே மழையே!

மழையே மழையே வாவாவா!
வளமை பெருக்க வாவாவா!

அருவி நீரும் நீயேதான்!
ஆற்று நீரும் நீயே தான்!
பெருகும் கடலும் நீயே தான்!
பேறாம் ஊற்றும் நீயே தான் – மழையே...!

வாட்டும் வெயிலே உன்தோற்றம்!
வானில் படர்தல் உன்ஏற்றம்!
வாட்டம் போக்கல் உன்வாழ்க்கை!
வணங்கும் தெய்வம் நீயானாய் – மழையே...!

கரிய முகிலால் மின் வெட்டால்
"காளி" யானாய் கண்காண!
சொரியும் மழையின் பெருநலத்தால்
சொல்லும் 'மாரி' நீயானாய்; – மழையே...!

புல்லும் இல்லை நீ இன்றேல்;
பொழிலா தோன்றும் பார் நன்றாய்;
**நல்ல ஒழுக்கம் உன் ஒழுக்கம்;**
நாடே அறியும் நன்றாக! – மழையே...!

உணவும் நீரும் நீயேதான்!
உடையும் பிறவும் நீயேதான்!
உணர்வும் கலையும் நீயேதான்!
உணர்ந்தோர் வாழ்வார் உலகுக்கே! – மழையே...!

❖❖❖

# 21. ஓட்டம்

ஓடும் நீரால் ஓடையதாம்!
ஓடி வழிவ தோடாகும்!
ஓடை ஓடும் பக்கத்தின்,
ஊர்கள் ஓடைப் பெயரெய்தும்!

ஓடி ஆடல் உடல் நலமாம்;
ஒழுங்காய் ஓடல் விளையாட்டு;
ஓடும் நீரே நன்னீராம்;
ஓடா நீரோ நாறிப்போம்!

குருதி ஓட்டம் உயிரோட்டம்;
கொள்ளும் மூச்சும் உயிரோட்டம்!
கருதி மூச்சை அடக்கிவிடின்,
காலம் நெடிது வாழ்ந்திடலாம்

ஓட்டம் இல்லை என்பதுவோ,
ஒழியா வறுமைக் குறிப்பாகும்!
ஓட்டம் நீரில் கொள்வதுவே
ஓடம் என்னும் பேர்பெறுமே!



# 22. நீர்நிலைகள்

மலையின் கசிவோ சுனையாம்!

வீழும் நீரோ அருவி!

ஓடும் நீரோ ஆறு!

பிரியும் நீரோ கால்வாய்!

தேங்கும் நீரோ கண்வாய்!

பாயும் நீரோ வாய்க்கால்!

கீழே தோண்டின் ஊற்று!

மேலும் தோண்டின் கிணறு!

தேங்கும் நீரோ குட்டை!

குடிக்கும் நீரோ ஊருணி!

ஊரை அடுத்த தூரணி!

ஏருக் காவ தேரி!

ஆற்றுத் தேக்கம் அணையாம்!

முன்னைப் பேரோ சிறையாம்!

❖❖❖



## 23. பூவின் பருவம்



பூவின் தோற்றம் அரும்பு;
சற்றே திரளின் முகையாம்;
மேலும் திரளின் மொக்காம்;
இதழ்கள் விரியின் மலராம்;
முதிர்தல் ஆயின் அலராம்;
வீழும் நிலையில் வீயாம்;
எல்லாம் இணைவே பூவாம்!

## 24. மக்கட் பருவம்

பிறக்கும் போது பிள்ளை;
தவழும் போது குழந்தை;
வளரின் குமரன் குமரி;
மேலே காளை கன்னி;
மேலே வாலியன் வாலியை;
மேலே முதியன் முதியள்;
மேலே மூதாளன் மூதாட்டி;
மேலே வாய்க்கும் பேறானால்
பெருமூ தாளன் என்பதுவும்
பெருமூ தாட்டி என்பதுமாம்!

❖❖❖

## 25. மாணவர்

மாண்பாய் அமைந்தோர் **மாணவராம்**
 மதிக்கும் பெருமை தாமமைந்தார்
மாண்பாம் செயலே செய்திடுவார்
 மாண்பு நாக்கர் **மாணாக்கர்**
மாண்பாம் கல்வி மட்டுமிலை
 மாண்பாம் ஒழுங்கும் கொண்டிருப்பார்
மாண்பு மிக்க **மாணியென்னும்**
 மாணப் பெருமை அவர்க் குண்டாம்!

காலம் தவறாக் கடைப்பிடியர்;
 கடமை தவறாக் கடைப்பிடியர்;
சாலக் கற்ற கல்வியதைச்
 சார்ந்த பிறரும் பெறுதற்கு
மேலும் உதவும் திறமுடையார்
 மேன்மைக் கவரே இருப்பாவார்,
பாலும் தேனும் கலந்தால்போல்
 பண்பும் கலையும் கலந்தவரே.

இளமைப் பருவம் கற்பதற்கே
 ஏற்ற பருவம் ஆவதுவே
வளமை யாகப் பின்னாளில்
 வாழு தற்குத் தக்கதென
உளதாம் வாய்ப்பைத் தவறாமல்
 உணர்ந்து பெருக்கிக் கொளவேண்டும்
இளமை மீண்டும் வருதலிலை
 இதனை எண்ணின் வெற்றியதே!

❖❖❖

## 26. பெற்றோர்

பெற்ற பொழுதை நானறியேன்
பெற்ற பாட்டை நானறியேன்
பிறந்த பின்னர் வளருங்கால்
பெருகச் செய்த குறும்புகளை
நினைந்து பார்த்தும் தெரியேன் நான்
பள்ளி செல்ல மறுத்தாலும்
பாங்காய்ப் படிக்க வைத்ததுவும்
துள்ளிச் செய்த துடுக்குகளால்
துன்பப் படாமல் மகிழ்ந்ததுவும்
இன்பம் என்றே வளர்த்தார்கள்!
இந்த உடலும் அவர்கொடையே
இந்த உயிரும் அவருயிரே
இந்த வாழ்வும் அவர்வாழ்வே
எந்த உரிமை எனக்குண்டு;
தந்தை தாயர் கொடையன்றி!
**அந்த நன்றி நான்சொன்னால்,**
**அவர்தம் பெற்றோர்க் கந்நன்றி**
**சொந்த மாகும் என்கின்றார்!**
அந்த நன்றி இலையானால்
இந்தப் பேறும் எங்களுக்கு
வந்து சேர வழியுண்டா?
முந்தை முந்தைப் பெற்றோர்கள்
தந்த கொடையே நாமெல்லாம்
அந்த மூலப் பெற்றோரே
சிந்தை கொண்ட **பரன்பரையே!**

❖❖❖

# 27. பேணும் பிள்ளை

பெற்ற பிள்ளை போல,
மற்றைப் பிள்ளை பேணல்,
தமிழர் வழக்கம் ஆகும்!
அமிழ்தக் கொள்கை இதுவே!
ஆன்ம நேயம் ஆகும்!
நிற்கும் பிள்ளை மூன்று (தென்னை, கமுகு, கறிவேப்பிலை)
ஊரும் பிள்ளை மூன்று (கீரி, நாவி, அணில்)
பறக்கும் பிள்ளை மூன்று (கிளி, நாகணவாய், கரிக்குருவி)
நீரின் பிள்ளை ஒன்று (முதலை)
ஆகப் பிள்ளை பத்தே!
ஆய்ந்து பார்ப்பீர் கொத்தாய்!

❖❖❖

# 28. கூட்டம்

கூடிச் சேர்ந்தால் கூட்டம்!
கூட்ட வகையோ பலவாம்
மக்கள் கூடல் கூட்டம்;
அறிஞர் கூடல் அவையம்;
ஊரின் கூடல் மன்றம்;
ஆடும் மாடும் மந்தை;
ஈயும் கொசுவும் மொய்த்தல்;
கடைகள் கூடல் சந்தை;
பறவை கூடல் தங்கல்;
மரங்கள் கூடல் தோப்பு;
செடிகள் கூடல் தோட்டம்;
சங்கு கூடல் சங்கம்;
அயிரை கூடல் அயிரம்;
கூட்டம் மேலும் எண்ணும்;

❖❖❖

## 29. குரல்கள்

**குரலால் வருவ தொலியே !**
(குரலின் றெழுவ தோசை
இடியும் வெடியும் போன்றே)
ஆட்டின் குரலோ மேமே !
மாட்டின் குரலோ மாமா !
சேவல் குரலோ கோ கோ !
காக்கைக் குரலோ கா கா !
கொக்கின் குரலோ கொக் கொக் !
கூகைக் குரலோ குக்கூ !
குரங்கின் குரலோ குர்குர் !
வாத்தின் குரலோ குவா குவா !
அணிலின் குரலோ கீச்கீச் !
கீரிக் குரலோ கீர்கீர்.

❖❖❖

## 30. குரல்வகை

காக்கைக் குரலோ கரைதல் ;
சேவல் குரலோ கூவல் ;
மயிலின் குரலோ அகவல் ;
கழுதைக் குரலோ கத்தல் ;
குதிரைக் குரலோ கனைத்தல் ;
யானைக் குரலோ பிளிறல் ;
புலியின் குரலோ உறுமல்
அரிமாக் குரலோ முழக்கம் ;
வண்டின் குரலோ ஞமிர்தல் ;
இன்னும் குரல்கள் உண்டே ;

❖❖❖

# 31. தமிழர் விழாக்கள்

பிறந்த நாளில் பிறப்பு விழா!
மணந்த நாளில் மண விழா!
இருபத் தைந்து வெள்ளிவிழா!
ஐம்ப தானால் பொன்விழா!
அறுப தானால் மணிவிழா!
எழுப தானால் முத்துவிழா!
எழுபத் தைந்து பவழவிழா!
எண்ப தானால் வைரவிழா!
நூறு, நூற்றாண் டாயவிழா!
விழைந்து செய்வது விழாவாகும்;
வெட்டிச் செலவு செய்யாமல்,
வெற்றி கொண்ட விழாவாக
பெற்றோர் முதலாய் எல்லாரும்
பேணிக் கொள்ளல் நலமாகும்!
பொங்கல் விழாவும் கார்த்திகையும்
பூரிப் பான தமிழர்விழா
தைந்நீ ராடல் புதுவெள்ளம்
பொங்கும் நாளும் அத்தகைத்தே!

❖❖❖

## 32. தட்டு

தட்டைப் பயற்றைப் பார்ப்பீர்!
தட்டுத், தட்டாய் நெற்றாம்!
தட்டுத் தோறும் பயறே!
தட்டுத் தட்டாம் வாலால்,
தட்டாம் பூச்சி யாமே!
தட்டுத் தட்டாய் அமையும்,
குளவி தேனீத் தட்டே!
கரும்பு சோளம் கம்புத்
தட்டுத் தட்டே தட்டை!
தட்டுத் தட்டாய்ப் பொருளைத்
தக்க வாறே அடுக்கித்
தந்தார் பலகை கொண்டு!
தட்டுப் பலகை உண்டு!
கூடைத் தட்டும் உண்டு!
தட்டு வகைகள் பலவே!
உண்ணு தற்குத் தட்டு!
நொண்டி ஆடத் தட்டு!
தட்டில் லாமல் வாழ்வார்,
தட்டு மிகவே கொண்டார்!
தட்டிக் கேட்டால் சண்டை;
தட்டுக் கெட்டால் வசையாம்!
தட்டிக் கொடுத்தால் இசையாம்!
தட்டுப் பாறை மலையாம்!
தட்டி விழுத்தும் முதுமை!
தட்டு வேலை தட்டே!

# 33. கண்ணி

கண்ணே இரண்டும் நேர்நேராய்
காணும் அமைவு கண்டிடுவாய்!

கண்கள் போலப் பூவிரண்டைக்
கட்டி எடுப்பார் கண்ணியென.
எண்ணி இரண்டு வரிகளிலே
இயலும் பாடல் கண்ணியதாம்!

இணையாய் இருக்கும் இரண்டிலைகள்,
இருக்கும் கொடிகள் கண்ணிகளாம்!
பொன்னாங் கண்ணி, கரிசாலை
பொருந்தும் கண்ணி கண்டிடுவாய்!

கண்ணி வைத்துப் பறவைகளைக்
காலில் மாவட்டச் செய்திடுவார்;
எண்ணின், இரக்கம் இல்லாமல்,
இதனைச் செய்தல் புலப்படுமே!

பலகண் இருந்தால் பலகணியாம்
பரவும் காற்று வரும்வழியாம்
இலகும் 'கண்ணிப்' பேருடையார்
எண்ணிப் பார்ப்பின் பலரன்றோ!

❖❖❖

## 34. வரிப்பாடல்

அணிலைப் பார்ப்பாய் அமைவாக!
அமையும் வரிகள் மூன்றாமே;
அணிலின் வரிகள் மூன்றவையும்
அமைந்த நிலைமை ஒப்பனவே!

அணிலின் வரிபோல் நம்முன்னோர்
அமைத்த பாடல் வரிப்பாடல்!
அணியாம் சிலம்பின் காப்பியத்தில்
அமைந்த வரிகள் பற்பலவாம்!

அளவு மூன்றும் ஒப்பனவாம்;
அமைந்த பொருளும் ஒப்பனவாம்;
அளவும் சுவையும் மும்மையதாம்!
அமைப்பின் அருமை செம்மையதாம்!

இயற்கை வழங்கும் அருமைகளை
எண்ணி எழுத வல்லாரார்?
முயற்சி அளவு பயனுண்டாம்!
முயல்வோம் பெறுவோம் நம்மளவில்!

❖❖❖

# 35. கரும்பைப் பார்


கரும்பைப்பார்! கரும்பைப்பார்!
கணுக்கணுவாம் கரும்பைப்பார்!

கருமை யாலே கரும்பாகும்;
கடித்துத் தின்னச் சுவையாகும்;
விரும்பும் கட்டி ஆக்கியதால்
வேண்டும் பண்டம் செய்தாரே!

இஞ்சி சேர்த்தார் சாற்றோடே
இயற்கை மருந்தும் ஆயதுவே!
மிஞ்சி வயிற்றில் கிடப்பதனை
மெதுவாய் எரித்துத் தள்ளியதே!

விருந்தும் மருந்தும் ஒன்றாக,
வேறு மருந்து வேண்டாவே!
துரும்பும் வீணாய்ப் போவதிலை!
தூவி எரிக்கும் பொருளாமே!

❖❖❖



# 36. வெள்ளரிக்காய்

ஓடிப் படரும் கொடியைப்பார்!
ஒற்றைக் கொடியின் விரிவைப்பார்!
தேடிப் பார்த்தால் பலபிஞ்சு
தெரியும் வெள்ளை வரிவரியாய்!

பெருக்கப் பெருக்க வெள்வரியும்
பெருகும் வெள்ளை தெளிவாக
சுருங்கச் சொன்னால் வெள்ளரிக்காய்!
விரித்துச் சொன்னால் வெள்வரிக்காய்!

வாலென் றாலோ வெள்ளையதாம்
வளமாய்ச் சொன்னால் வால்வரிக்காய்!
மேலொன் றுவமை அணில்வரிக் காய்!
மேன்மைப் பெயரும் அன்னதுவே

அரியும் வரியும் ஒன்றேயாம்
அகர முதலி எடுத்துப்பார்!
புரியும் உனக்குத் தெளிவாக!
புலமை விரியும் மேலாக!

உள்ளே உள்ள வெள்ளையதை
ஒடித்துக் காண வேண்டாமல்
தெள்ளத் தெளிவாய் வெளியேயே
தெரியக் காட்டும் வரியதுவே!

❖❖❖



# 37. இயற்கை வண்ணம்

பச்சை சிறப்பா நீலம் சிறப்பா?
இரண்டு நிறமும் சிறப்பேதான்!
கருமை சிறப்பா சிவப்புச் சிறப்பா?
இரண்டு நிறமும் சிறப்பேதான்!
மஞ்சள் சிறப்பா வெள்ளை சிறப்பா?
இரண்டு நிறமும் சிறப்பேதான்!
பச்சை இல்லாப் பயிரேது!
நீலம் இல்லா முகிலுண்டா?
கருமை தானே இருளாகும்!
சிவப்புத் தானே குருதியதும்!
மஞ்சள் கிழங்கே மஞ்சளதாம்!
வெள்ளை தானே கதிரொளியாம்!
**எல்லா நிறமும் நல்நிறமே**
எண்ண முடியா வகையினிலே
வண்ணக் கூட்டாய் இருந்தாலும்
**வண்ணம் எல்லாம் ஒப்பேதான்!**
**மாந்தர் போல வண்ணத்தால்**
**உயர்வு தாழ்வு காட்டுகிற**
**மடமை இயற்கை கொள்ளாதே!**
**வண்ணம் பேசும் எவரேனும்**
**வண்ணம் பேசும் எந்நூலும்**
**எண்ணிப்பாரா தொதுக்கிவிடு!**
**எண்ணிப் பார்க்கும் பிறப்பாவாய்!**

❖❖❖

# 38. நேய உலக மூளை

கட்டை வண்டி வந்தது ;
காடி வண்டி வந்தது ;
குதிரை வண்டி வந்தது ;
கூண்டு வண்டி வந்தது ;
மிதிக்கும் வண்டி வந்தது ;
மிதிக்கும் உந்தும் வந்தது ;
உந்து வகைகள் எண்ணில,
வந்த ததன்பின் தொடரிகள் ;
வான ஊர்தி வகைகளும்
உலுங்கு முதலாம் வகைகளும்
குலுங்கு வளர்ச்சி இன்னவை !
**மூளை வளர்ச்சி இன்னவை !**
**மூளை வளர்ச்சி மட்டுமே !**
**உலகைக் காக்க உதவிடா !**
நெஞ்ச வளர்ச்சி இல்லையேல்,
நேர்ந்த வளர்ச்சி எல்லாமும்,
நேரும் உலகக் கேடுகளே ;
மூளை வளர்ச்சி வேண்டுவதே
முறையாம் நெஞ்ச வளர்வோடே !
**நெஞ்சம் உள்ள மூளையே !**
**நேய உலக மூளையாம் !**

❖❖❖

# 39. தக்காரே தக்கார்

பெற்றோர் எல்லாம் பெற்றோர் அல்லர் ;
பிறந்தோர் எல்லாம் பிறந்தோர் அல்லர் ;
உற்றார் எல்லாம் உற்றார் அல்லர் ;
உறவர் எல்லாம் உறவர் அல்லர் ;
அன்பர் எல்லாம் அன்பர் அல்லர் ;
நண்பர் எல்லாம் நண்பர் அல்லர் ;
வள்ளல் எல்லாம் வள்ளல் அல்லர் ;
இரப்பர் எல்லாம் இரப்பர் அல்லர் ;
துறவர் எல்லாம் துறவர் அல்லர் ;
தூயர் எல்லாம் தூயர் அல்லர் ;
பூசகர் எல்லாம் பூசகர் அல்லர் ;
பற்றர் எல்லாம் பற்றர் அல்லர் ;
கற்றார் எல்லாம் கற்றார் அல்லர் ;
கல்லார் எல்லாம் கல்லார் அல்லர்;
பதவியர் எல்லாம் பதவியர் அல்லர் ;
உதவியர் எல்லாம் உதவியர் அல்லர் ;
அலுவலர் எல்லாம் அலுவலர் அல்லர் ;
ஏவலர் எல்லாம் ஏவலர் அல்லர் ;
நடிப்பர் எல்லாம் நடிப்பர் அல்லர் ;
கலையர் எல்லாம் கலையர் அல்லர் ;
தொண்டர் எல்லாம் தொண்டர் அல்லர் ;
வினைஞர் எல்லாம் வினைஞர் அல்லர் ;
பொழிவர் எல்லாம் பொழிவர் அல்லர் ;
கேட்பார் எல்லாம் கேட்பார் அல்லர் ;
எழுதுவர் எல்லாம் எழுதுவர் அல்லர் ;
படிப்பர் எல்லாம் படிப்பர் அல்லர் ;
மாந்தர் எல்லாம் மாந்தர் அல்லர் ;
**ஏந்திய கடைப்பிடி எவர்க்குள் ளனவோ**
**அவரே அதற்குத் தக்கார் ஆவர்**
**அல்லார் எல்லாம் அல்லா தாரே**

❖❖❖

# 40. இயற்கை ஆடல்

இளமை வயதில் போய்விட்டான் – என்றே
இரங்கு கின்ற மாந்தர்காள்!
வளமை மிக்க கொழுந்திலைகள் – வெம்பி
வாடி வீழ்தல் அறியீரோ ?

நடுமை வயதில் போய்விட்டான் – என்றே
நலிவு கொள்ளும் மாந்தர்காள்!
கொடுமைக் காற்றால் பெருமரங்கள் – தம்
வேரோ டொழிதல் காணீரோ!

முதுமை வயதில் போய்விட்டான் – என்றே
முணகி வருந்தும் மாந்தர்காள்!
எதுவும் பிடிப்புப் போயற்றுத் – தானே
சருகாய் உதிர்தல் தெரியீரோ!

**இயற்கை நடத்தும் ஆடலிவை** – அந்த
இயற்கை இயல்பைச் சொன்னாரும்
இயற்கைக் குள்ளே ஒடுங்கியதை – நீர்
எண்ணிப் பார்த்துத் தெளிவீரே!

வாழ்நாள் வரையும் அறிஞரிலை – என்றே
வாய்மை உரைக்கும் நற்றிணையே!
வாழ்வோம் நலமாய் வாழும்வரை – அதுவே
வாழ்வார் தமக்குப் பாடமென

❖❖❖

## 41. காது கேட்கவில்லையா? கவலை விடுக!

"காது கேட்க வில்லையா?
கவலை விட்டு வருவீரே!
காதுக் கருவி மாட்டியே
கவலை யற்றுச் செல்லலாம்!"

என்றோர் தாளின் செய்திவர,
இனியோர் கவலை இலையென
அன்புத் துணையர் தம்மோடு,
அந்த மனையை அடைந்தாரே!

ஒருநூ றதனைக் கட்டியபின்
உள்ளே நுழைந்தார்; மருத்துவரும்,
ஒருநாற் காலி இருக்கையிலே
அமரச் சொல்லி ஆய்ந்தாரே;

மெல்ல ஒலித்தார் கேட்கவிலை;
மேல்மேல் பெருக்கி ஒலிசெய்தார்;
நல்ல மணியை ஆட்டிப்பின்
வட்டத் தட்டு மணி அடித்தார்;

**தாளை எடுத்துக் கவலையிலை**
**காது கேளா துறுதியென**
ஆளை வெளியே விடுத்தார் பின்
அவரே சொன்ன செய்தியிதாம்

காது கேளா அப்புலவர்
காது கேட்போர் திகைப்பெய்த
ஓது நூல்கள் இருநூறும்;
ஒளிரப் படைக்கும் பேறுற்றார்!

பொறியின் இன்மை பழியன்று
**ஆள்வினை இன்மை அதுவேதான்**
**செறிவாம் பழியாம்** என்பதற்குச்
செய்ய சான்றாய் அமைந்தாரே

❖❖❖

# 42. குணமும் குற்றமும்

ஒப்பப் பேணி வாழ்வதுவே,
உயர்ந்த வாழ்வின் அடையாளம்!
தப்புக் கண்டு கூறுவதோ,
தப்பர் அவராம் அடையாளம்!

தமது குற்றம் காண்பவரேல்,
தப்புக் காணார் பிறரிடத்தே!
தமது குற்றம் மறைப்பதற்கே,
தப்புக் கூறல் அவர்வழக்கே!

குற்றம் செய்யார் உலகிலிலை;
குணமே இல்லார் எவருமிலை;
குற்றம் குணங்கள் ஆராய்வார்,
குணத்தைப் பெருக்கி வாழ்வாரே!

வீம்பர் செருக்கர் விழிப்படையார்;
வீம்பும் செருக்கும் தடித்தனத்தைக்
கூம்ப விடாமல் பெரிதாக்கும்!
கூட்டைப் பிரித்த குரங்காக்கும்!

❖❖❖

# 43. பிள்ளைப் பேறு

பிள்ளைப் பேறு பெரும்பேறாம்!
பிள்ளை வளர்ப்புப் பெரும்பாடாம்!
பிள்ளை செய்யும் குறும்புகளால்,
பெற்றோர் மகிழ்ச்சி பெரிதாகும்!

ஆடும் மாடும் குட்டிகளை,
ஆகும் வகையால் காத்திடுமே;
ஓடும் பருவம் வந்து விடின்,
ஒதுங்கிப் போகும் தாமாக!

மக்கட் பிறப்போ மாண்பிறப்பாம்!
மறவா அன்புச் சிறப்பினதாம்!
ஒக்க உறைந்து பேணுவதே,
உயிரின் உயிராம் கடமையதே!

காலம் மாறி விட்டாலும்
கடமை மாறல் இல்லாமல்,
சாலப் போற்றல் நலமாகும்!
சால்பால் வாழும் உலகமதே!

❖❖❖

# 44. மேனியும் மேன்மையும்

மேனி உண்டு,
மேலும் உண்டு - வாழ்க்கையில்
**மேன்மை உண்டா** எண்ணுவாய் ?

பிறப்பும் உண்டு,
இறப்பும் உண்டு - திண்ணமாய்ச்
**சிறப்பும் உண்டா** - எண்ணுவாய் ?

மனமும் உண்டு,
இனமும் உண்டு - யாவரும்
**இணைந்த துண்டா** - எண்ணுவாய் ?

நலமும் உண்டு,
பொலமும் உண்டு - நாளெலாம்
**குலவி வாழ** - எண்ணுவாய் !

பொதுமை உண்டு
புதுமை உண்டு - கொண்டுநீ
பதமாய் வாழ - எண்ணுவாய் !

❖❖❖

## 45. வாழ்ந்தோம் ! வாழ்வோம் !

வாழிய தம்பி ! வாழிய தங்காய் !
ஆழிய கடல்மேல் ஓங்கிச்
சூழிய மலைமேல் சுடர்விளக் கெனவே !

கடலின் பரப்பும் மலையின் உயரமும்
தொடலாம் உங்கள் உழைப்பால்
சுடர்வான் பரப்பெலாம் சொந்தம்உமக்கே !

அடியடி யேறி முடிமேல் நிற்கும்
படியினை வாழ்வெனக் கொண்டால்
பிடிபடும் இமயமும், கையகத் ததுவே !

இமயம் ஏறி என்ன மொழிந்திடுவீர் ?
குமரி நாளில் இருந்திலை
எழுந்தனை பின்னென இசைப்பீர் இனிதே !

இங்கே பாரும் கடல்வாழ் உயிரிகள்
தங்கி யிருந்த சான்றுகள்
பொங்கிக் கிடப்பதை என்றுரைப் பீரே !

அந்நாள் பழமை எங்கள் பழமை
இந்நாள் தேய்ந்தோம் மீண்டும்
அந்நாள் நிலையை எய்துவம் எனவே !

❖❖❖

# 46. நலமாய் வாழ்வோம்

**பாலைக்** காய்ச்சி வைத்தே
மேலே **மோரைத்** தெளித்தால்
காலைப் போதில் **தயிராம்** !
கடைந்தால் கட்டி **வெண்ணெய்** !

வெண்ணெய் உருக்கின் **நெய்யாம்**
வேண்டும் ஐந்து பொருள்கள்
எண்ணிக் கொள்ள உதவும்
இந்தச் செல்வம் இனிதே!

ஆவும் எருதும் செல்வம் !
ஆரும் அறியத் தெரியும்!
பூவும் கனியும் போலப்
புரியும் ஆய்ந்து பார்த்தால்!

பாலின் சுவையோ இனிமை
தயிரின் சுவையோ புளிப்பு
நெய்யின் சுவையோ நறுமை
நேய மிக்க ஒருமை!

எல்லாம் சுவையாய் ஆக்கும்
செல்வ மாகும் மாடு
நல்ல உரமும் நல்கும்
நாடு சிறக்க மல்கும்!

கன்றும் ஈனும் மேலும்
ஒன்றும் செல்வம் பெரிதாம்
நன்றாய் வளர்த்தால் ஆவை
நலமாய் வாழ்வோம் நாமே!

❖❖❖

# 47. உலகம் வாழ்ந்தால் நாமும் வாழ்வோம்

சா(ய்)க்கடை அடுத்தி ருந்தால்
சார்ந்திடும் அந்த நாற்றம்;
பூக்கடை அடுத்தி ருந்தால்
பொலிந்திடும் நறுமை யாமே!

அடுத்தடுத் தெங்கும் தொற்றும்,
அழிபிணி மல்கு மாயின்,
விடுத்திடு மாமோ நம்மை,
விலக்குதல் கடமை அன்றோ!

சோலையில் அமரும் போது
சொரிந்திடும் இன்பக் கொள்ளை!
பாலையில் திரியும் போது
பார்த்திடற் கில்லை அன்றோ!

ஊரெலாம் செழிக்க வாழ்ந்தால்;
உலகெலாம் செழிக்க வாழ்ந்தால்;
நேருறும் நமக்கும் வாழ்வே!
நிலைகெடின் நமக்கும் அஃதே!

❖❖❖

## 48. வறுமையும் வளமையும்

வறுமையே கொடிய நோயாம்!
வளமையாய் வாழ்வோன் அந்த,
வறுமையைத் தகர்க்கா விட்டால்,
வறுமையே தகர்த்தல் உண்மை!

பொருளெனும் வேலி யிட்டுப்
புன்மையை மறைக்கும் காலம்,
இருளிடைப் போயிற் றையா;
எண்ணிநீர் திருந்தல் வேண்டும்!

இருப்பவர் இருக்க வேண்டின்,
இலாதவர் வாழு மாறே,
இருப்பதைப் பகுத்தல் வேண்டும்!
இல்லையேல் இருக்க மாட்டார்;

செல்வருக் குள்ள வெல்லாம்,
சிறுசிறு மனப்போ ராட்டம்!
இல்லவர்க் குள்ள வெல்லாம்
இணையிலா உயிர்ப்போ ராட்டம்!

உயிரினைப் பணயம் வைத்த
ஒருதனிப் போரை ஆக்கித்
தயிரென உடைந்து நீராய்த்
தகர்வதைக் கருத வேண்டா!

❖❖❖

## 49. கடவுள் சிரிப்பே தொண்டாகும்

1. விண்ணின் சிரிப்பே மழையாகும்!
வீட்டின் சிரிப்பே மகவாகும்!
எண்ணின் சிரிப்பே அறிவாகும்!
எழுத்தின் சிரிப்பே செயலாகும்!

2. பண்ணின் சிரிப்பே பாட்டாகும்!
பாரின் சிரிப்பே கூட்டாகும்!
வண்டின் சிரிப்பே தேட்டாகும்!
வளத்தின் சிரிப்பே வாழ்வாகும்!

3. மண்ணின் சிரிப்பே மலராகும்!
மதியின் சிரிப்பே ஒளியாகும்!
கண்ணின் சிரிப்பே அருளாகும்!
கடவுள் சிரிப்பே தொண்டாகும்!

❖❖❖

## 50. வருக! வாழ்க!

வருக என்னல் அரிதாமா?
வாழ்க என்னல் அரிதாமா?
பெருக வழங்கும் கொடையதிலும்
பெரிய கொடையே இவையாமே!

கரவில் லாத கனிவுரையே
கட்டிப் பாகில் இனிதாகும்
வரவில் பெரிய வரவாகும்
வந்தோர் மலரும் மலர்ச்சியதே!

பூவாய் மலர்ந்து பொலிவாகிப்
போலி இல்லா நல்லுரையே!
நாவாய் வழியும் தேனாகி
நன்மை பலவும் வழங்குவதே!

❖❖❖

# 51. வாழவேண்டும் ஒன்றாக!

வாழ வேண்டும் நன்றாக - நாம்
வாழ வேண்டும் ஒன்றாக !

வாழப் பிறந்த எல்லாரும்,
வாழ உரிமை உடையவரே !
வாழப் பிறந்த அனைவரையும்,
வாழ்ச் செய்தல் நம்கடனே !

பெற்ற வாழ்வு பெறலின்றிப்
பெரிய தாழ்வில் வாழ்வாரேல்,
உற்ற நமக்கும் குறையென்றே
உணர்தல் வேண்டும் முழுதாக !

ஒருவர் உடலில் உள்ளபல
உறுப்பில் எந்த உறுப்பேனும்
வருந்தும் என்றால் உடல்முழுதும்,
வருந்தும் அன்றோ அதுபோன்றே !

வீழும் வாழ்வைத் தூக்காதார்,
வீணாய் வாழும் பிறவியரே !
வீழா திருக்கச் செய்வாரே,
வெற்றி வாழ்வுப் பிறவியரே !

பற்று தீயைப் பாய்ந்தோடிப்
பற்றா தணைப்போர் பரிவாளர் !
உற்ற துயரம் எதற்கேனும்,
ஓடித் தீர்ப்போர் ஒளிவாழ்வர் !

❖❖❖

# 52. உணர்வார் உணரட்டும்!

சண்டை போட்டான் என்மகனே,
சார்ந்து நின்றாள் மருமகளே!
மண்டை இடிதான் எதற்கென்றே
வந்தேன் என்றார் **வன்மீகர்!**

ஓடிப் போனாள் என் மனைவி;
ஒருவர் துணையும் எனக்கில்லை!
நாடி வந்தேன் இங்கென்றார்,
**நல்ல பெருமாள்** என்பாரே!

மருகன் கொடுமைக் களவில்லை
மானம் இழந்து வாழ்கின்றேன்
இருந்தேன் மகளின் நினைவுடனே,
என்றார் பெரியர் **மூக்கப்பர்!**

மூவர் நமக்கும் தட்டின்றி,
முறையாய் உண்ண வாய்ப்பிருந்தும்,
யாவர் தாமும் துணைக்கின்றி
ஆமாம், நமக்கேன் இந்நிலைமை?

**ஒத்துப் போக ஒருவரிலை;**
**ஒத்து வாழ நாமுமிலை!**
ஒத்து வாழ என்செயலாம்?
ஒன்றாய் நினைவோம் எனும்போதில்,

**வெள்ளை அம்மாள்** முன்வந்தாள்;
வெந்து பேசும் உரைகேட்டேன்;
உள்ள துயரம் உளத்துயரம்!
ஒத்துப் போனால் ஒழிதுயரம்!

சின்ன குடிசை என்குடிசை ;
　　சேர்ந்து நால்வர் இருந்திடலாம் !
என்னைக் காக்க ஆக்குவதை
　　எல்லார் தமக்கும் ஆக்குகிறேன் !

நான்கு பேரும் ஒருதாயின்,
　　நல்ல பிள்ளை நாமென்ன,
ஊன்றி வாழ்வோம் உரிமையுடன் !
　　**உணர்வார் உணர வைத்திடுவோம் !**

ஒருவர் என்றால் ஏதிலியாம் !
　　ஒன்றி நின்றால் உலகாகும் ;
வருவார் எவர்க்கும் தகுபாடம்
　　வாய்த்த நமக்கோ நலப்பேறாம் !

❖❖❖

# 53. சேவை ஒன்றே என்பரிசு

“இன்று நாளை விடுமுறைநாள்
இங்கே தங்கி இருப்பதற்குச்
சென்று வருவோம் எம்மில்லம்”
என்றான் **இனியன் மணியனிடம் !**

மணியன் சொன்னான் ; “நான்ஏழை
மதிப்பு மிக்க செல்வன்நீ !
துணையாய் வந்தால் உன்பெற்றோர்
தூற்று வார்கள் உனைநன்றாய் !

இல்லை இல்லை என்பெற்றோர்
எனைப்போல் உனையும் மதிப்பார்கள் !
**தொல்லை யான கணக்கதனைத்**
**துலங்கச் செய்வாய் வந்தங்கே!**

என்றான் இனியன் மணியனிடம் ;
“எனக்கும் நல்ல தெளிவாகும்
ஒன்றுக் கிரண்டு முறைகற்ற
உயர்வும் கிட்டும் நமக்கென்றான்”

வந்தான் இனியன் மணியனுடன்
வாராக் கணக்கை வரப்படுத்த
இந்த மணியன் உதவுவதாய்
எனக்குச் சொன்னான் உடன்வந்தோம் !

“நல்ல செய்தாய் என்றன்னை
நன்றாய்ப் படிப்பான் தன்னோடு,
சொல்லிக் கூடிப் படிப்பதுபோல்
சுடரும் வழியொன் றிலை” யென்றார் !

“கடமை முடித்து உணவுண்டு
கருத்தாய்ப் படிப்பீர் மாடியிலே !
இடையே தின்னும் பண்டமதும்
ஏற்ற குடிப்பும் விடுகின்றேன்”

"அப்பா வந்தால் மிகமகிழ்வார்
　　ஆகும் உதவி புரிந்திடுவார்;
ஒப்பி வாய்க்கும் போதெல்லாம்
　　உடனாய் வருவீர்" என்றாரே !

இனியன் மகிழ்ந்தான் வராக்கணக்கை
　　எளிதில் மணியன் கற்பதற்குக்
கனியின் சாறாய்ப் பருகிடவே
　　கருதிக் கருதிக் கற்பித்தான்.

அப்பா வந்தார் மறுநாளில்
　　ஆசான் கற்பான் போலாக
ஒப்பிக் கற்கும் இருவரையும்
　　உவப்பாய் வாழ்த்தி மகிழ்வுற்றார்.

"விடுப்பு வந்த போதெல்லாம்
　　விரும்பி இங்கே வா"வென்றார்,
படிப்புச் செலவு கேட்டறிந்து
　　பணமும் தந்தார் இனியனிடம்!

"இனிய நண்பன் இவ்வினியன்
　　இவற்குச் சொல்லித் தரல்கடமை!
கனியை உதவும் மரமெதுவும்
　　காசு கருதித் தரா"தென்றான்.

சீரின் உரைத்தாய் ; அம்மரங்கள்
　　சிறந்த பயன்கள் தருதற்கு,
**வேரில் நீரும் விடவேண்டும்!**
　　**வெந்தால் பயன்கள் தராவென்றார் !**

தேவை யான போதினிலே
　　தேர்ந்து கொடையைப் பெறுகின்றேன் !
**சேவை ஒன்றே என்பரிசு**
　　**சேரும் நன்மை என்றானே !**

❖❖❖

# 54. நொண்டி

வினவன் : நொண்டிப் பையா மரத்தடியில்
நோகா திருத்தல் இல்லாமல்,
சுண்ட வைக்கும் சுடுவெயிலில்
சுற்ற ஏனோ போகின்றாய் ?

விடையன் : தம்பி, சும்மா சுற்றிவரத்
தக்க காலா எனக்குண்டு ?
வெம்பும் வெயிலே என்றாலும்
வேலை கெட்டுக் கிடவேன்நான் !

வினவன் : என்ன வேலை செய்திடுவாய் ?
ஏந்திப் பிச்சை வாங்கிடவோ?

விடையன் : என்னைப் பெற்ற தாயாணை
ஏந்திப் பிழைக்க மாட்டேன்நான் !

பின்னே வந்து என்னைப்பார் !
பிறகு சொல்வாய் எதுவேனும்;
பின்னி முடையக் கைபோதும் ;
பின்னே உண்டோ நொண்டியென ?

எவரும் என்போல் நெடுநேரம்.
இருந்து பின்னார் இயற்கையருள் !
எவரே பெற்றார் என் போன்றே?
எண்ணிப் பார்ப்பாய் என்தம்பி !

உறுப்பில் தானே நான் நொண்டி
**உள்ளத்தில் இல்லை நொண்டியெனல்**
வெறுக்கத் தக்கார் உளம்நொண்டர் !
உண்மை உரையே இதுகண்டாய் !

❖❖❖

# 55.தாத்தா - தந்தை - பேரன்

(தாத்தா – முதியர்: பார்வையிலாதவர்: அவர்தம் உண்கலம் ஆகிய ஓட்டைக் கழுவுகிறார்)

பேரன் : தாத்தா இந்த மண் ஓட்டைத்
தண்ணீர் விட்டுக் கழுவுவதேன்?

தாத்தா : அப்பா பேரா இதுதானடா
அன்னம் உண்ணும் கிண்ணமடா!

பேரன் : வெள்ளிக் கலங்கள் எத்தனையோ
வீட்டில் நமக்காய் உள்ளனவே!

தாத்தா : ஆமாம் ஆனால் உன்னப்பன்
அவற்றை எனக்குத் தரமாட்டான்!
(தரமாட்டாரா? பார்த்துக் கொள்கிறேன்; இரவுவர முதியவர் படுக்கிறார். அவரின் பக்கம் இருந்த மண் ஓட்டைப் பேரன் எடுத்துக் கொண்டு போய் விடுகிறான். காலை ஆயது. மகன் வந்தான்.)

தந்தை : ஆகாரம் வேண்டா மோடா அசட்டுக் கிழப்பயலே
வேகமாய் எழுந்து ஓட்டை விளக்கி எடுத்து வாடா!
(கிழவர் தேடுகிறார்; ஓட்டைக் காணவில்லை. அதனால்)

தாத்தா : ஐயையோ ஓட்டைக் காணோம்
ஆரோ எடுத்துக் கொண்டார்.
வையாதே என்மகனே
வஞ்சமிது யார் செய்ததோ? (பேரன் வருகிறான்)

பேரன் : அப்பா தாத்தாவை வையாதே!
அன்னியக் கொடுமைகள் செய்யாதே!
ஓட்டை எடுத்தவன் நான்தானே!
உனக்கென் றதைநான் வைத்துவிட்டேன்!
(நீ முதிய னாக ஆகுங்கால்
அதனை உனக்கு நான் தருவேன்!)

தந்தை : அறிவு வந்தது – நல்ல அறிவு வந்தது
உண்மையாக இப்போதுதான் அறிவு வந்தது!
உற்றவரே – எனைப் பெற்றவரே –
உமக்கே என்வணக்கம்!
(மாணவர்கள், அனைவரும்)
"தந்தை தாய்ப் பேண்"
அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்!

நான் மூன்றாம் வகுப்புப் படிக்கும் போது என் ஆசிரியர் அற்புதம் என்பார் கற்பித்தது ஆண்டு : 1939.

❖❖❖

# 56. பிட்டின் பெருமை

பிட்டு விற்றார் ஒருமுதியர்!
பிட்டு வாங்கக் காசின்றிப்
பிட்டைப் பார்த்து நின்றவனைப்
"பிட்டு வேண்டு மா" என்றார்.
காசே இல்லை! பசிக்கிறது;
காசில் லாமல் தருவாரார்?
ஓசி கேட்க மனமில்லை
"ஒதுங்கி நின்றேன் நானென்றான்"
ஓசி இல்லை என்பேரன்;
உரிமை யோடு வாங்கித்தின்!
கூசி நில்லா திங்கேவா
கூடு மளவும் உன்ணென்றார்!
பிட்டு வாங்கு பையனவன்
பிட்டை யுண்ணா தோடினனே!
"பிட்டை உண்பாய் வேண்டுமெனில்
பிறகும் தருவேன்" என்றுரைத்தார்!
"இல்லை எங்கள் ஆசிரியர்
என்போல் பசியாய் உள்ளாரே!
நில்லா தோடித் தின்றிடுவோம்"
என்றான் சிறுவன்; பாட்டியவர்.
"பிட்டை அவர்க்குத் தந்துவா!
பின்னர் உனக்கும் தருகின்றேன்;
தட்டா தென்றும் பசிவந்தால்
தருவேன் நீயும் வாவென்றார்.
முதிர்ந்தான் சிறுவன் **ஈசுவர**
**சந்த்ர வித்யா சாகரென!**
உதித்த பெண்ணின் பெருமையினால்
உண்டா யிற்று பெண்ணீலமாய்!
'காசி இந்து மகளிர்பல்
கலையின் கழகம்' அதுவாகும்!
ஓசிப் பிட்டின் உருவாக்கம்
உயர்ந்து சிறந்து விளங்குவதே!

❖❖❖

# 57. அறிவே துணை

அடர்த்தி யான காடதுவே
நடந்து போனார் பத்துப்பேர்
நடக்கும் துயரம் இல்லாமல்
நயமாய்ப் பாடிச் சென்றார்கள்!

வழியில் திருடர் மூன்றுபேர்
வளைத்தார் கத்தி நீட்டியே
பழியாய்ப் பறித்தார் பணமெல்லாம்
பதைத்து நின்றார் வழிப்போக்கர்

“நன்றாய்ப் பாடி வந்தீர்கள்;
நாங்கள் மகிழ்வாய்க் கேட்டிடவே
ஒன்றாய்ப் பாடி ஆடுங்கள்
கும்மி தெரிந்தால் அடியுங்கள்.”

என்றார் திருடர்; பதின்பேரும்.
ஏற்ற கும்மி அடித்திடுவோம்;
நன்றாய் அடிப்போம் நீங்களதை
நடுவே இருந்து கேளுமென,

திருடர் அமர்ந்தார் ஊடாக;
தெளிந்த பாட்டுக் காரனவன்;
வரிசை வகுத்தான் வட்டமுற!
வளைந்து நிமிர்ந்து பாடினனே!

பத்துக்கு மூன்று தில்லல்லோ!
பறிகொ டுத்தோம் தில்லல்லோ!
ஒன்றுக்கு மூன்று தில்லல்லோ!
ஒன்று மிச்சம் தில்லல்லோ!

பக்கத் தினிலே பாலைக் கொடி தில்லல்லோ!
பக்கத் தினிலே பாலைக் கொடி தில்லல்லோ!

மூன்று மூன்று பேர்களாய்
ஒருவன் மேலே வீழவும்
பாலைக் கொடியைப் பறித்தவன்
காலைக் கையைக் கட்டவும்
பறித்த பணத்தை அன்றியும்
மடியில் இருந்த பணத்தையும்
எடுத்துக் கொண்டார்; மும்மூன்று
எற்று எற்றி ஓடினார்!
**'அறிவு அற்றம் காக்கு'** மென
அறியச் செய்தார் பதின்மருமே!

என்இளமையில் கேட்டது "பத்துக்கு மூன்று"

❖❖❖

# 58. இறைமை நெஞ்சம்

வண்ண வண்ண மலர்கள்
　　வகைவ கையாம் மலர்கள்;
எண்ண முடியா மலர்கள்!
　　எழுத முடியா மலர்கள்!

மண்ணின் மணமும் கொண்டு
　　மழையின் வளமும் கொண்டு
கண்ணின் உள்ளே புகுந்து
　　கவர்ந்து கொள்ளும் மலர்கள்!

கண்டு மகிழ லின்றிக்
　　கையால் பறித்து விட்டால்
வண்டும் ஈயும் பூச்சி
　　வகையும் வருமோ இங்கே!

விருந்து செய்யும் பண்பை
　　விடுக்கச் செய்தல் ஆமா?
பொருந்தும் இனத்தை வளர்க்கப்
　　போற்றும் முறைமை ஆமா?

முன்னே பறித்து விட்டால்
　　முயன்று விரும்பிக் காணப்
பின்னே வருவார் தமக்கப்
　　பேறு வாய்க்கா தன்றோ!

மலரைப் பறியா நெஞ்சம்
　　மலரின் நெஞ்சம் ஆகும்
இலகும் அந்த நெஞ்சம்
　　இறைமை நெஞ்சம் ஆகும்!

❖❖❖

# 59. கூடாத கூட்டு

மாடு பிடிக்கச் சந்தைக்கு
மாட சாமி புறப்பட்டார்;
கூடத் துணையாய் இருக்குமெனக்
குப்ப னோடு புறப்பட்டார்;

துட்டுத் தந்தால் உடன் வருவேன்
துட்டில் லாமல் மாட்டனெனத்
துட்டுத் தந்தார்; உடன்வந்தான்;
தொலைவாய் நடக்க இருட்டியதே!

விடியும் அளவும் மறைவாகப்
படுத்தி ருப்போம் விடிந்ததுமே
நடப்போம் என்றான்; சரியென்றார்;
நல்ல மறைவில் படுத்தார்கள்!

நடுவே குப்பன் எழுந்திருந்தான்
நடைபா தையிலே படுத்தானே!
இடையே திருடர் இருவர்கள்
"என்ன கட்டை வழி"யிலென

"கட்டை இடுப்பில் துட்டுண்டோ
கண்டு சொல்லும்" என்றானே
தட்டிப் பறித்தார் துட்டதனை
'செல்லும் துட்டா' என்றார்கள்.

"செல்லும் செல்லா தென்றுரைக்கச்
செல்வர் உள்ளார் செடிமறைவில்
சொல்லிக் கேளும்" என்றானே!
செல்வர் பணமும் போயிற்றே!

மூடன் துணையாய் வந்ததனால்

முடிச்சுப் பணமே போயதுவே!

வீடு நோக்கி நடந்தார்கள்

வேறு வழிதான் இல்லையே!

கூடா உறவு குடிகெடுக்கும்

கொள்ளும் துணையே கொல்துணையாய்த்

தேடா தமைந்து வந்தாலும்

ஒட்டா தொதுக்கல் நலமாமே!

## 60. எறும்பின் ஒழுக்கம்

எறும்பு செல்லும் வரிசை
எனக்கு நல்ல பாடம்!
குறும்பு செய்ய வில்லை;
குறுக்கே போகவில்லை - எறும்பு...

எதிரே வந்த எறும்பும்
இடைஞ்சல் இன்றிப் போக
அதுவே விலகிப் போகும்!
அருமை யான முறைமை! - எறும்பு...

முட்டை தூக்கி வந்தால்,
முன்னே ஒதுங்கிச் செல்லும்,
முட்டல் மோதல் இல்லை;
மூளும் துயரம் இல்லை; - எறும்பு...

இன்னல் ஏதும் இருந்தால்
பின்ன தற்குச் சொல்லி,
இன்னல் இன்றித் திரும்பி
இனிது போக வைக்கும்! - எறும்பு...

ஓய்தல் இல்லா உழைப்பை
ஓதா தோதும் என்றே
ஆய்ந்து கொள்வோம் நாமே
அறிந்து வாழ்வோம் நன்றாய்;

❖❖❖



## 61. உதவி தந்த பாடம்

அவித்த நெல்லைக் காயப் போட்டார்
அகவை முதிர்ந்த பாட்டியார்;
கவிந்த முகிலும் காலை ஊன்றிப்
பெய்யும் போலத் தெரியவே!

நனைந்து போகா தள்ளுதற்கு
நடுக்கத் தோடு கூட்டினார்;
நினைந்த பள்ளிச் சிறுவன் ஒருவன்
நேராய் வந்து கூட்டினான்!

ஏற்ற பொழுதில் உதவி செய்ய
எண்ணி வந்த சிறுவனைப்
போற்றிப் புகழ்ந்த பாட்டி வாழ்த்தைப்
புரிந்தான் சிறுவன் மகிழ்வுடன்

உதவி சிறிதே எனினும் அதுவே
உரிய அளவில் மிகுதியாய்
**உதவி பெற்றார் வாழ்த்தும் பேற்றை**
**உதவும் என்னும் பாடமே!**

❖❖❖

## 62. உலக உருண்டை


நீலக் கடலின் மேலே
கரிய புள்ளி தெரிந்தது;
கோல வண்டு போலும்
கூறும் குருவி காக்கை
கருடன் என்னப் பெருக்கக்
கப்ப லாக வந்தது
உருண்டை உலகம் என்னும்
உண்மை அறிந்தேன் நன்றாய்!

❖❖❖

# 63. வள்ளல் பாரி

பாரி என்பான் ஒருவள்ளல்;
பறம்பு மலைக்குத் தலைவனவன்;
முந்நூ றூர்கள் அவனூர்கள்;
முந்நூ றூரும் பரிசளித்தான்;
மாரி போலும் கொடையாளன்;
மாசில் லாத மனத்தாளன்!
செல்லும் வழியில் ஒருமுல்லை,
சேர்ந்து படர வழியின்றி,
அல்லல் பட்டே ஆடுவதை
அறிந்து தேரை அதுபடர,
விட்டுச் சென்றான் நடந்தேதான்,
வியந்த மக்கள் பாரியினை
முல்லைக் கொடிக்குத் தேர்தந்த
வள்ளல் பாரி எனப்புகழ்ந்தார்!
பறம்பு மலையே இந்நாளில்
பிரான்ம லையாய் வழங்குவதே!

❖❖❖



## 64. வள்ளல் பேகன்

பேகன் என்பான் பெருவள்ளல்;
பேசும் பொதினி அவன்மலையாம்!
மேகம் கண்டு மயிலாட
மேனி குளிரால் நடுங்குவதாய்
எண்ணிப் போர்த்த போர்வையினை,
எடுத்தே அதற்குப் போர்த்தியவன்!
பலரும் பாடும் புகழாளன்!
பழனி மலையே பழம்பொதினி!
பழநி என்னல் புனைகதையே!
பழனி மலையின் அடிவாரம்.
வையா புரியாய் வழங்குவது.
**வள்ளல் பேகன் வையாவிக்**
**கோப்பெரும் பேகன் என்றதனால்!**

❖❖❖

## 65. வள்ளல் அதியமான்

தகடூர் மன்னன் அதியமான்!
தகடூர் இந்நாள் தருமபுரி!
புகழால் சிறந்த அன்னவனைப்
போற்றி வாழ்ந்தார் ஔவையார்!
போரைத் தடுக்க முன்நின்ற
புவியின் முதற்பெண் தூதுவராம்
பெருமை அவர்க்கே உண்டெனலாம்!
நெடுநாள் வாழும் அமிழ்தநெல்லி
ஒருநாள் அதியன் பெறலானான்!
அதனை உண்டு தான்வாழ
எண்ணல் இன்றி "ஔவையார்
உண்டால் தமிழ்வா ழும்"என்றே
அவர்க்குத் தந்தான்; "இறைவனென
அழியா வாழ்வு வாழ்க" வென்ற
அவரின் வாழ்த்தால் இறவா
தின்றும் புகழால் வாழ்கின்றான்!

❖❖❖

## 66. வள்ளல்கள்

பறம்பு மலையின், பாரி;
கொல்லி மலையின், ஓரி;
முள்ளூர் மலையின், காரி;
நளிரும் மலையின், நள்ளி;
பொதிய மலையின், ஆ அய்;
தகடூர் மலையின், அதியன்;
பொதினி மலையின், பேகன்;
முதிர மலையின், குமணன்;
எண்மர் வேளிர் மன்னர்கள்
**தமிழ வள்ளல் இவர்களாம்!**

❖❖❖

## 67. பெருமையர்

வில்லில் வல்லான், ஓரி!
சொல்லில் வல்லான், கீரன்!
வரலாற் றறிஞன், பரணன்!
அரசத் தூதர், ஔவை!
அமைதித் தூதர், கோவூர்!
அரிய நட்பின், ஆந்தை!
கடமை வாழ்வர், கபிலர்!
அரசும் வேண்டா, அரிசில்!
இலக்க ணத்தான், நிலந்தந்தான்!
இமயம் சென்றான், கரிகாலன்!
கற்பை மதித்தான் குட்டுவனே!
நற்பே ரெல்லாம் மறவாதீர்!

❖❖❖

# 68. வள்ளலார்

**பாரி பேகன் என்னாமல்**
**வள்ளல் என்றால் வள்ளலாரே!**
சாதி மறுப்பு வள்ளலார்;
சமய மறுப்பு வள்ளலார்;
சடங்கு மறுப்பு வள்ளலார்;
கொல்லா நோன்பர் வள்ளலார்;
கொள்கை மிக்க வள்ளலார்;
உச்சி முதலாய் உடலெல்லாம்.
வெள்ளை உடுத்த வள்ளலார்;
பயிரைக் கண்டு வாடியவர்;
உயிரின் துடிப்புக் கஞ்சியவர்;
பசியைத் தீர்த்த வள்ளலார்;
பிணியைத் தீர்த்த வள்ளலார்;
வாய்மை வடிவே வள்ளலார்;
தூய்மை உறைவே வள்ளலார்;
ஓதாக் கல்வி கற்றவர்,
ஓது கல்விக் குற்றவர்,
சாகாக் கலையைத் தேர்ந்தவர்
சாவா நிலையை அடைந்தவர்;
ஒளியே வழிபா டாக்கியவர்;
உலக ஒருமை தேக்கியவர்;
பழமை எல்லாம் ஆய்ந்தவர்;
புதுமை வழியில் தோய்ந்தவர்;
உலகம் உய்யப் பொதுநெறி,
இலகச் செய்த வள்ளலார்;
**அவர்தம் வழியைக் கொண்டவர்;**
**ஆன்ம நேயம் கொண்டவர்!**

❖❖❖

## 69. பழந்தமிழ் மாதங்கள்

விண்மீன் இயல்பை விளங்கக் கண்டு;
கண்மேல் காட்சியாய்த் திங்கள் பெயரைப்
படைத்தனர் தமிழர்; பயிலா தொழியவே,
மீட்டெடுத் தமைத்தார் மீட்பர்பா வாணவர்,;
தைஎனல் '**சுறவம்**'; மாசி '**கும்பம்**';
பங்குனி '**மீனம்**'; சித்திரை '**மேழம்**';
வைகாசி '**விடை**'யாம்; ஆனி '**இரட்டை**';
ஆடி '**கடகம்**'; ஆவணி '**மடங்கல்**';
புரட்டாசி '**கன்னி**'; ஐப்பசி '**துலை**'யே;
கார்த்திகை '**நளி**'யாம்; மார்கழி '**சிலை**'யே;
சுறவம் முதலாச் சுடர்பெயர் எல்லாம்
பண்டைத் தமிழர், கண்டவை யாமே;

❖❖❖

## 70. கறி

முன்னாள் கறியென் றொன்றுரைத்தார்;
மூடிப் போயிற் றப்பொருளே!
பொன்னார் சங்கப் பாடலதில்
பொலியும் பெருமைப் பொருளாகும்;
தன்னே ரில்லாத் தன்மையினால்
தகவாய் மேலை நாவாய்கள்
பொன்னோ டெய்திக் கறியோடு
போமென் றுரைக்கும் பேறுண்டே!

பகைவன் வீடே என்றாலும்
பத்து மிளகு வைத்திருந்தால்,
நகைவன் ஆக நடையிடலாம்;
நச்சு நீக்கி ஆதலினால்!
திகைக்க வைக்கும் நோயதனைத்
திகைக்க வைக்கும் மிளகென்றே
உகப்பாய் செய்தார் மிளகுவடை;
உற்ற சேவு, முருக்கென்றே!

❖❖❖

# 71. கவியின்பம்

கவிதல் வளைதல் மூடுதலாம்;
கவிதை கவர்தல் வயமாக்கல்;
கவியின் உள்ளம் கவர்ந்திழுக்கும்;
காட்சி கருத்து கற்பனைகள்,
கவியக் கிடக்கும் மாண்வகையால்
கவிதைப் பெயரை உற்றதுவே!
கவிதைக் குணர்வே உயிராகும்!
கவிதைப் பயனோ செயல்வீறாம்!

கவிதை தந்தான் கவியானான்;
கவிந்தான் உள்ளில் காவியமாய்;
செவிதா என்னச் செவிதந்தான்
செறிந்தான் தன்னுள் வேறற்றே
குவியாக் குவியாய்க் கொழுமுறுவல்
கொண்டான் கொடுத்தான் கவிச்செல்வன்;
அவியா இன்பம் அருளின்பம்,
ஆமாம், அளித்தான் தளிர்த்திடவே!

எண்ணா உவகை இன்பத்தை,
இசைந்து வழங்கும் கவிச்செல்வம்;
எண்ண எண்ணத் திளைப்பாகும்
இனிய நலங்கள் எய்துதலால்!
வண்ண வண்ணப் பொருளாகி
வளரும் இன்பப் பெட்டகமாய்த்
திண்ணம் இருக்கும் தெவிட்டாத
தேனாய் இனிக்கும் என்றென்றும்!

"கன்னல் பாகில் கோல்தேனில்
கனியில் கனிந்த கவிபாட
அன்னத் தொகுதி வயல்கருவை
ஆண்டாள் என்னை ஆண்டதுவே"
என்ன இசைத்தான் வரகுணனே!
"தென்னுண் தேனாம் கவியின்பம்"
என்ன மொழிந்தான் பெருங்கம்பன்
அன்னான் கவியோ பேரின்பம்!

"உள்ளு தோறும் உள்தோறும்
உள்ளம் உருக்கும் வள்ளுவனார்
தெள்ளும் அமுதக் குற"ளென்னத்
தெளிந்தான் உரைத்தான் தித்திக்க
வெள்ளம் போல வெளிப்பட்ட
விரிபா ரதியின் பாடல்களைக்
கள்ளின் வெறியாய்க் கண்டுரைப்பான்
கவியாய்த் தந்தார் **கவிமணியே!**

புரட்சிக் கவிஞர் பாவேந்தாய்ப்
பொலிந்த புகழர் பாவெல்லாம்
திரட்டுப் பாகாய்த் தித்திக்கத்
திளைப்பார் பெருக்கம் கண்கூடாம்!
முரட்டுப் பார்வை என்றாரும்,
முன்னே சொன்ன கருத்துகளைப்
புரட்டிப் போட்டுப் பாராட்டும்
புதுமை அவரின் தனிச்சிறப்பே!

❖❖❖

## 72. உருக்கும் வாசகம்

நெய்யின் உருக்கம், மெழுகுருக்கம்,
நேரும் பனிக்கல் நெகிழ்வுருக்கம்,
மெய்மை அன்பின் கண்ணுருக்கம்,
மேலை அடியார் உயிர்உருக்கம்,
தெய்வ அன்னை தனியுருக்கம்,
தேரும் இன்ன உருக்கமெலாம்
எய்த அருளும் வாசகத்திற்
குருகார் எதற்கே உருகுவரே!

உருக்கும் உருக்கால் பெயரெய்தும்
உருகி உடனஃ திறுக்கமுறும்!
உருக்கம் நெய்தல் களமேனும்
உள்ளே அவலம் உறைந்திருக்கும்!
பெருக்க அன்பின் வாசகத்தின்
பேறாம் உருக்கம் ஓதுநரை
ஒருக்க உருக்கி ஒளியாகி
ஒன்றோ டொன்ற உய்த்திடுமே!

❖❖❖

## 73. உருவும் உளமும்

ஏனோ சிரித்தாய் குழந்தாய்?
- எனக்குத் தெரிய வில்லை!
ஏனோ அழுதாய் குழந்தாய்?
- எனக்குத் தெரிய வில்லை

சிரிப்பும் அழுகையும் தெரிய,
நான், அம்மா ஆகவேண்டும்!
இல்லை, குழந்தை ஆக வேண்டும்!
இரண்டும் ஆக இயலாதே! - என்றால்
உருவால் தானே முடியாது!
உளத்தால் ஆக முடியுமே! ஆம் !
**உளத்தால் ஆவேன் இருவருமாய் !**

❖❖❖

# 74. இறை

உலகை இயக்கும் ஆற்றலதை
உயர்ந்த **இயவுள்** என்றார்கள்!
இலகும் அதற்கே இன்னொருபேர்
இனிய **கடவுள் என்பதுமாம்!**

இயக்கம் எங்கே உண்டெனிலோ
எங்கும் உண்டாம் என்பதையே
மயக்கம் இல்லா **இறையென்ன**
மகிழ்ந்து சொன்னார் வெளிப்படவே!

புல்லே முதலாம் எவ்வுயிர்க்கும்
பொருந்து மூலம் உண்டென்னச்
சொல்லி வைத்தார் **முதலென்றே**
சொன்னார் **மூலம்** என்றும்மே!

உயிர்கள் உய்ய வேண்டுமென
உரிய வகையில் பகுத்தளித்தே
உயிரைக் காக்கும் உயர்நிலையை
உயர்ந்த **பகவென்** றுரைத்தாரே!

அறிவில் முதிர்ந்த அறிவாலே,
அமைத்த பெயர்கள் 'இவ்வைந்தும்';
**அறிவின் வல்லார் இன்றைக்கும்**
**ஏற்றுப் போற்றும் உண்மையதே!**

❖❖❖

## குறிப்பு

## நீர்நிலைகள்

மலையின் கசிவோ சுனையாம் !

வீழும் நீரோ அருவி !

ஓடும் நீரோ ஆறு !

பிரியும் நீரோ கால்வாய் !

தேங்கும் நீரோ கண்வாய் !

பாயும் நீரோ வாய்க்கால் !

கீழே தோண்டின் ஊற்று !

மேலும் தோண்டின் கிணறு !

தேங்கும் நீரோ குட்டை !

குடிக்கும் நீரோ ஊருணி !

ஊரை அடுத்த தூரணி !

ஏருக் காவ தேரி !

ஆற்றுத் தேக்கம் அணையாம் !

முன்னைப் பேரோ சிறையாம் !

## பழந்தமிழ் மாதங்கள்

விண்மீன் இயல்பை விளங்கக் கண்டு;
கண்மேல் காட்சியாய்த் திங்கள் பெயரைப்
படைத்தனர் தமிழர்; பயிலா தொழியவே,
மீட்டெடுத் தமைத்தார் மீட்பர்பா வாணர்,;
தைஎனல் '**சுறவம்**'; மாசி '**கும்பம்**';
பங்குனி '**மீனம்**'; சித்திரை '**மேழம்**';
வைகாசி '**விடை**'யாம்; ஆனி '**இரட்டை**';
ஆடி '**கடகம்**'; ஆவணி '**மடங்கல்**';
புரட்டாசி '**கன்னி**'; ஐப்பசி '**துலை**'யே;
கார்த்திகை '**நளி**'யாம்; மார்கழி '**சிலை**'யே;
சுறவம் முதலாச் சுடர்பெயர் எல்லாம்
பண்டைத் தமிழர், கண்டவை யாமே;

Printed @ The Printing House, Try-23. Ph : 0431-2420121